**தலைப்பு – 222 இலங்கை தரைப் படையின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 222 - இலங்கை தரைப்படையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப்பதிவேடுகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய பதிவேடுகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளில் மேற்கொள்ளப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 செப்தெம்பர் 20 ஆந் திகதி தரைப்படைத் தளபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மறள்றும் இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

இலங்கை தரைப்படைக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 160,396.36 மில்லியனாக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 148,126.44 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, இலங்கை தரைப்படையின் தேறிய ஏற்பாடுகளில் சேமிப்பு ரூபா 12,269.92 மில்லியன் அல்லது 7.65 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 151,664.60 | 144,320.61 | 7,344.99 | 4.84 |
| மூலதனம் | 8,731.76 | 3,805.83 | 4,925.93 | 56.41 |
| மொத்தம் | **160,396.36** | **148,126.44** | **12,269.92** | **7.65** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

2016/ 2017 'பெரும்' போகத்திற்காக 'தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம்' மற்றும் சேதனப் பசளை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம்' என்பவற்றின் கீழ் இலங்கை தரைப்படையால் அமுலாக்கப்பட்டிருந்த சிறிய மட்ட நீர்ப் பாசன முறைமைகளின் புனரமைப்பிற்காக 'வீ தியாவர' என்ற பெயருடைய 02 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்குவதற்கு சனாதிபதி செயலகத்தால் முறையே ரூபா 09 மில்லியன் மற்றும் ரூபா 10 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்தது.

சிறிய மட்ட நீர்ப்பாசன முறைமைகளின் புனரமைப்பிற்காக 'வீ தியாவர' இன் கீழ் 06 குளங்கள் புனரமைப்பதற்கு ரூபா 3.18 மில்லியன் பெறுமதியான 33,498 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. ஆகவே, 02 குளங்களின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய 04 குளங்களின் பௌதீக முன்னேற்றம் 03 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. வேலை மதிப்பீடகளின் பிரகாரம், 5.11 மில்லியன் பெறுமதியான 53,802 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016/ 2017 'பெரும் போகத்திற்காக சேதனப் பசளை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டதை அமுலாக்குவதற்கு ரூபா 10 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்த போதிலும் ரூபா 1.50 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான பொறுப்புக்கள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாது இருந்த அதேநேரம் ரூபா 11.50 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தன.

**2.2. முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லை**

விடய இல. 22201, இலங்கை தரைப்படையின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பில் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ள படியானது | இழிவு எல்லை | உள்ள படியானது | உச்ச எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2,750.00 | 2,749.50 | 2,700.00 | 2,768.88 | 2,800.00 | 1,481.85 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை தரைப்படையின் 7002/0000/00/0028/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் ரூபா 222.74 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான கட்டுநிதியின் மீதி நிலுவையாக இருந்தது.

**2.4 பொதுவைப்புக் கணக்கு**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை தரைப்படையின் வைப்புக் கணக்கின் மொத்த மீதிகள் ரூபா 192.13 மில்லியனாகும். விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இல. | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0115/000 | 0.04 |
| 6000/0000/00/0002/0162/000 | 7.18 |
| 6000/0000/00/0013/0115/000 | 146.62 |
| 6000/0000/00/0016/0105/000 | 18.85 |
| 6000/0000/00/0020/0025/000 | 19.08 |
| மொத்தம் | 192.13 |

**2.5 கணக்காய்வு அவதானிப்புகள்**

2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக இலங்கை தரைப்படையின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையின் 1.1 ஆம் பந்திகளில் காணப்படுகின்ற கணக்காய்வு அவதானிப்புகளிற்கு உட்படுத்தப்பட்டவை திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது. முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 3 ஆம் பந்திகளில் காணப்படுகின்றன.

**3. விடயங்கள் மற்றும் குறிப்பிடத்தக்க கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1. ஒதுக்கீட்டுக் கணக்கு**

பாக்கிஸ்தான் இந்தியா கடன் திட்டத்தின் கீழ் இலங்கை தரைப்படைக்கு செய்யப்பட்ட ரூபா 587.52 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகளில் தனியொரு உபகரணத்தைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 0.14 மில்லியன் தொகை மாத்திரம் செலவழிக்கப்பட்டிருந்ததுடன் கொள்வனவு நடவடிக்கைகளை அமுலாக்குவதிலுள்ள தாமதம் காரணமாக ரூபா 587.38 மில்லியன் தொகை மிகுதியாக இருக்கின்றது.

**3.2. கட்டுநிதிக் கணக்கு**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை தரைப்படையின் மொத்த தீர்க்கப்படாத கட்டுநிதி மீதிகள் ரூபா 222.74 மில்லியனானதுடன் 2017 யூலை 24 இல் உள்ளவாறு ரூபா 32.48 மில்லியன் கூட்டுத் தொகையான மீதிகள் தீர்க்கப்படாது இருந்தது.

**3.3. பொது வைப்புக் கணக்கு**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாணவர் தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்குவதற்கு கல்வி அமைச்சிடமிருந்து பெறப்பட்டிருந்த ரூபா 17.22 மில்லியன் பொது வைப்புக் கணக்கில் இருந்தது. 2017 யூலை 20 இல் உள்ளவாறு ரூபா 0.17 மில்லியன் மீதி தீர்க்கப்பட வேண்டியிருந்தது.

**3.4 அரச உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 22201 ஆம் இலக்க அரச உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்குகள் தொடர்பில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம், ரூபா 117.70 மில்லியன் கூட்டுத்தொகையான மீதிகள் அறவிடவேண்டிய திகதியில் நிலுவையாக இருந்தது. அந்த நிலுவையாக இருக்கின்ற மீதிகள் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான வீச்செல்லை கொண்ட காலமாக நிலுவையாக இருந்ததுடன் 2017 யூலை 20 இல் உள்ளவாறு ரூபா 68.98 மில்லியன் கூட்டுத்தொகையான மீதிகள் அறவிட வேண்டியிருந்தது.

3.5. **கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**சொத்துக்கள் முகாமைத்துவம்**

**தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை தரைப் படையால் ரூபா 6,176.31 மில்லியன் கூட்டுத் தொகையான மொத்தப் பொறுப்புக்கள் தீர்க்கப்படாது இருந்தது.

3.6 **சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாரேஹன்பிட்டய இலங்கை தரைப்படையின் பயன்பாட்டிற்காக தனியார் கம்பனியொன்றிடமிருந்து ரூப 66.08 மில்லியன் கிரயத்தில் 'சிங்கிள் பிளேன் மவுன்டன் சீ- ஆம்ஸ் சயத்தென் டஸ்' என்று அழைக்கப்பட்ட உபகரணம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது. கேள்வி விதப்புரைகளின் பிரகாரம், அந்த உபகரணம் 05 நுழைவுப் புள்ளிகளை கொண்டிருக்கும். எவவாறாயினும், உரிய உபகரணம் 05 நுழைவு புள்ளிகளை கொண்டிருக்கவில்லை என பின்னர் வெளிப்பட்டது. உபகரணமானது 2013 நவம்பர் 05 இல் வைத்தயசாலையின் எக்ஸ்றே பிரிவால் பெறப்பட்டிருந்தடன் வழங்கிய திகதியிலிருந்து 07 மாதங்கள் கடந்த பின்னர் 2014 மே 27 இல் அதன் செயற்பாடுகள் தொடங்கப்பட்டது. எவ்வாறாயினும், 05 நுழைவு புள்ளிகளுடன் உபகரணத்தின் மாற்றி பெறுவதற்காக விநியோகத்தரிடமிருந்து உபகரணத்தின் குறைபாடுகளை தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லல. இலங்கை தரைப்படை வைத்தியசாலை புதிய உபகரணத்த பெறுவதற்கான அச்சந்தர்ப்பத்தை தவறவிட்டிருந்தது. உரிய உபகரணம் 67 நோயாளிகளை மாத்திரம் இரத்த சுத்திகரிப்புச் செய்த பின்னர் பயனற்றிருந்தது என 2016 யூலை 07 இல் செய்யப்பட்ட பௌதீக மெய்மையாய்வில் வெளிப்பட்டது.

(ஆ) அம்பிமன்சல -01 இன் சுவசஹன நிகேத்னாவின் மேல் மாடியில் கழிவறைகள் இணைக்கப்பட்ட அறைகளில் ரைல் பதித்தல் வேலைகளின் நோக்கத்திற்காக களஞ்சியங்களில் 04 வகைகளில் பொருட்கள் பெறப்பட்டிருந்தது. அங்கு எந்தவொரு திருத்தப்பட வேண்டிய கழிவறைகளோ அல்லது கட்டிட வளவிற்குள் எந்தவொரு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டோ இருக்கவில்லை என 2016 ஒக்தோபர் 20 இல் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையில் வெளிப்பட்டது.

3.7. **முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாரேஹன்பிட்டய தரைப்படையின் வைத்தியசாலைக்காக ரூபா 8.02 மில்லியன் பெறுமதியான 'என்டி ரக் லேசர் பல்செட்' என்று அழைக்கப்பட்ட உபகரணத்தின் கொள்வனவுகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதகைளின் பிரகாரம், குறிப்பரைககளில் வேண்டப்பட்டவாறு தெரிவுசெய்யப்பட்ட வழங்குனரிடமிருந்து 05 ஆண்டுகளிற்குப் பதிலாக 02 ஆண்கள் மாத்திரம் உத்தரவாத காலப்பகுதி பெறப்பட்டிருந்தது. மேலும், உபகரணங்கள் 2015 சனவரி 28 அளவில் வழங்குவதற்கு உடன்பட்டிருந்த போதிலும் 2016 பெப்ரவரி 19 இலேயே வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் வழங்கல் காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் 8.2 ஆம் பிரிவில் வேண்டப்பட்டவாறு 30 நாட்களிற்கு மேலாக வழங்கலில் தாமதங்கள் நிகழுமாயில் செயலாற்றல் பிணைமுறியை பதிவழித்தது.

(ஆ) நாரேஹன்பிட்டய தரைப்படையின் வைத்தியசாலைக்காக ரூபா 8.02 மில்லியன் பெறுமதியான 'என்டி ஐக் லேசர் லோங்க் பல்செட்' என்று அழைக்கப்பட்ட உபகரணத்தின் கொள்வனவுகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதகைளின் பிரகாரம், குறிப்பரைககளில் வேண்டப்பட்டவாறு தெரிவுசெய்யப்பட்ட வழங்குனரிடமிருந்து 05 ஆண்டுகளிற்குப் பதிலாக 02 ஆண்கள் மாத்திரம் உத்தரவாத காலப்பகுதி

பெறப்பட்டிருந்தது. மேலும், உபகரணங்கள் 2015 சனவரி 28 அளவில் வழங்குவதற்கு உடன்பட்டிருந்த போதிலும் 2016 பெப்ரவரி 19 இலேயே வழங்கப்பட்டிருற்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் 8.2 ஆம் பிரிவில் வேண்டப்பட்டவாறு ஒப்பந்தத்தை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 30 நாட்களிற்கு மேலாக வழங்கலில் தாமதங்கள் நிகழுமாயின் செயலாற்றல் பிணைமுறியை காசுவதற்குப் பதிலாக வழங்கல் காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்தது.

(இ) 37 மல்டி மீடியா புரொயெட்டர்கள், 37 லொஜிக் 6X6 ரிப்பெட் திரை மற்றும் 37 650 வீர யூபிஎஸ் என்பவற்றை கொள்வனவு செய்வதற்கு 2016 திசெம்பர் 08 இல் கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது மொத்தம் 08 கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டது. அவற்றில், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அத்தகைய உபகரணங்களை் கொள்வனவு செய்வதற்கு 02 பதிவுகளை சிபார்சு செய்திருந்தது. எவ்வாறாயினும், கொள்வனவு குழு தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவால் சிபார்சு செய்யப்பட்டிருக்காத வேறு வருகைகளை தெிவுசெய்திருந்தது.

(ஈ) ஒவ்வொன்றும் ரூபா 15,100 கிரயத்தில் 300 கணனி மேசைகளை வழங்குவதற்கு தனியார் கம்பனியால் உடன்பட்டிருந்ததுடன் உரிய மேசைகள் குறித்துரைப்புகளுடன் இணங்கியிருக்காதமையால் மேசை ஒன்றிற்கு ரூபா 250 ஆல் விலை குறைக்கப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம், சகல மேசைகளும் 2015 ஒக்தோபர் 05 அளவில் வழங்கப்பட வேண்டுமென வேண்டப்படடது. எவ்வாறாயினும், 2016 சனவரி 05 இல் உள்ளவாறு 132 மேசைகள் வழங்கப்படடிருந்தன. இருப்பினும் 03 சந்தர்ப்பங்களில் வழங்கல் காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்தன. கொளவனவு திட்டம் 2015 இன் பிரகாரம், இந்த கொள்வனவிற்காக ரூபா 3.18 மில்லியன் தொகை மதிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றின் மீது ரூபா 4.95 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

(உ) 2015 திசெம்பர் 12 இல் 80 உணவு சூடாக்கிகளை கொள்வனவு செய்தலில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) உணவு சூடாக்கிகளின் தானியங்கி வெப்பக் கட்டுப்பாடு மற்றும் குறைந்தது 32 கிலோ கிராம் இயலளவு என்பவற்றுடன் இணங்கியிருக்கவில்லை என குறித்துரைப்புகளில் நியமம் கொண்டுள்ளதுடன் 10 கிலோ கிராம் முதல் 15 கிலோ கிராம் வரையான வீச்சில் உணவு சூடாக்கிகளின் இயலளவு இருந்தது என வெளிப்பட்டது. இது ரூபா 4,000 ஆல் விலையை குறைப்பதற்கு உடன்பட்டதுடன் கட்டளைகளை நிராகரிப்பதற்கு செய்யப்பட்ட கேள்வி காரணமாக மேலதிகமாக வெப்பக் கட்டுப்பாடு பொருத்தப்பட்டது.

(ii) மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களில், உணவு சூடாக்கியொன்று 2016 சனவரி 16 இல் அநுராதபுரத்தில் இலங்கை தரைப்படை 04 ஆவது படையணி சமிஞ்சைக்கு வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் உரிய உபகரணம் இருப்பில் இருக்கவில்லை என 2016 ஒக்தோபர் 17 இல் செய்யப்பட்ட களப்பரிசோதனையில் வெளிப்பட்டது.

**3.8 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

சாலவயில் இலங்கை தரைப்படை முகாம் அமைந்திருந்த தளத்தில் குண்டுவெடித்தலில் 2016 யூன் 05 ஏற்பட்ட நட்டங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 104(3) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு மீது சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப அறிக்கையின் பிரகாரம், இனங்காணப்பட்டு மதிப்பிடப்பட்ட மொத்த நட்டம் ரூபா 12,735.45 மில்லியனாகும். சம்பவத்தினை புலனாய்வு செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சால் நியமிக்கப்பட்ட ஆரம்ப புலனாய்வு நீதிமன்றமொன்றால் 2017 ஏப்ரல் 30 வரையும் தொடர்ச்சியாக புலனாயவு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றமையால் உள்ளபடியான நட்டம் நிர்ணயிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.9 முகாமைத்துவ திறமையீனங்கள்

மனிதநேய செயற்பாடுகளின் காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் வெல்லமுள்ளிவாய்காலில் விடப்பட்டிருந்த கெட்டுப்போன இரும்பால் கீறப்பட்டிருந்த பறா 111 படகுகள் விற்பனை செய்வதற்கு இலங்கை தரைப்படையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஆகவே, ரூபா 80.30 மில்லியன் விலையை சமர்ப்பித்திருந்த கேள்வியாளருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரர் ரூபா 47 மில்லியன் தொகை செலுத்தியிருந்ததுடன் ஒப்பந்தம் இடைநடுவில் விடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 செப்தெம்பர் 30 இல் கப்பல் விற்பனைகளில் பெறப்பட்ட ரூபா 47 மில்லியன் பெறுகைகளில், “அபி வெனுவென் அபி‘‘ நிதியத்திற்கு ரூபா 15 மில்லியன் தொகை செலவுவைக்கப்பட்டிருந்த அதேநேரம் ‘‘இலங்கை தரைப்படை நலன்புரி‘‘ நிதியத்திற்கு ரூபா 0.32 மில்லியன் தொகை செலவு வைக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர், “இலங்கை தரைப்படை நலன்புரி‘‘ நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட தொகை இலங்கை அரசாங்கத்தின் வருமானத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆகஸ்ட் 13 இல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் மேலதிக ஏற்பாடுகளின் பிரகாரம், வேலைத்தளங்களில் ஓடுகின்ற பத்துச் சக்கர வண்டிகளின் எண்ணிக்கையின் பிரகாரம், கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. ஆகவே, ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவீட்டு அலகு இன்மை காரணமாக, அகற்றப்பட்ட இரும்புகளை அகற்றும் நேரத்தில் தவறாக பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பங்கள் அமைந்திருந்தன. இரும்பு துருப்பிடித்தலை மதிப்பிடுவதற்கு கட்டுப்பாட்டுப் பகுதியில் வசதிகள் இருக்கவில்லை இதன் விளைவால், ஒரு தடவை துருப்பிடித்தலை அளவிடுவதற்கு உடன்படிக்கையில் எவ்வித நிபந்தனைக்கும் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என இலங்கை தரைப்படையின் சொத்துக்கள் முகாமைத்துவ கட்டுப்பாட்டாளர் அறிவித்திருந்தார்.

(இ) கடல் தண்ணீரிற்கு மேல் இருந்தவை அலைகளால் அடித்துச் செல்லப்பட்ட கப்பல் பாகங்களிற்கு பதிலாக கடல் தண்ணீரின் கீழான பாகங்களை அகற்றுவதற்கு உயர்ந்த தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்த வேண்டியிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், இலகுவாக அகற்ற முடிந்திருந்த பாகங்களை அகற்றுவதற்கு வாங்கியோரால் இயலக்கூடியதக இருந்ததுடன் மிகுதி பாகங்களை அகற்றுவதை தவிர்த்திருந்தனர். எவ்வாறாயினும், தண்ணீரில் வாழும் மீன்களிற்காகவும் அவற்றின் நிதி நன்மைகளைக் கருத்திற்கொண்டும் அதேபோல கப்பலின் மிகுதிப் பகுதிகளை நிறுத்திவைப்பதற்கு தீர்மானம் எடுத்திருந்தது என தெரிவித்திருந்தார். உரிய முகவர்களிடமிருந்து பெறப்பட வேண்டியிருந்த அவற்றின் மீது எதிர்பார்க்கப்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் மீதான அறிக்கைகளை 2017 செப்தெம்பர் 20 வரையும் பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.10. மனிதவளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை தரைப்படையின் இணைந்த பதவியணியினர் மற்றும் எண்ணிக்கை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | நிலவிய வெற்றிடங்களின் |
|---|---|---|---|---|
| (i) | உத்தியோகத்தர்- நிரந்தரம்/ தற்காலிக | 10,646 | 9,412 | 1,234 |
| (ii) | ஏனைய தரங்கள்- | 189,719 | 167,404 | 22,315 |

| | | | |
|---|---|---|---|
| நிரந்தரம்/ தற்காலிக | | | |
| | ------------ | --------------- | ----------------- |
| மொத்தம் | 200,365 | 176,816 | 23,549 |
| | ====== | ======= | ======= |

இலங்கை தரைப்படையின் சேவைகளிலுள்ள சிவில் உத்தியோகத்தர்கள் பின்வருமாறு உள்ளது.

| | பதவியணியினர் வகை | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகள் |
|---|---|---|---|---|---|---|
| | ------------------------ | -------------------------- | ------------------------- | ----------------------- | --------------------- | ---------------- |
| (i) | சிரேஸ்ட நிலை | 13 | 09 | 04 | - | - - |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | 03 | 03 | - | - |
| (iii) | இரண்டாம் நிலை | 199 | 150 | 49 | - | - |
| (iv) | ஆரம்ப நிலை | 6,386 | 9,343 | - | 2,957 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | | | | | |
| | | ------------ | --------------- | ----------------- | --------------- | |
| | மொத்தம் | 11,141 | 10,826 | 3,272 | 2,957 | - |
| | | ====== | ======= | ====== | ======= | |